**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070420236248

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 22.01.2023

Accepted: 06.03.2023

Published: 01.04.2023

Citation:
Kavitha Kathiramalai. "The Role of Sivadhiksha in Saiva Life as Told by the Sivagamas." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 83–87.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6248

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Role of Sivadhiksha in Saiva Life as Told by the Sivagamas

**Kavitha Kathiramalai**
*Research Scholar, Department of Hindu Civilization*
*Faculty of Higher Studies, University of Jaffna, Sri Lanka*

**Abstract**
The Agama is an age-old knowledge and sivagama is the book which removes the feces through knowledge and gives birth to the house. Manickavasagar's statement that the Lord has the twenty-eight Agamas, which are saiva siddhanta texts and the precepts of Siddhanta Saivism, as his image, is "Agamam Aginindru Annippan Thal Vazhga" is a highlight of sivagama ideas. Here 'Annipaan' is waiting. It is the Kriyapada of the Sivagamas that speaks about Sivadīdīksha. In Kriyapada, when the souls attain shakti nipada, the miracle of appearing to them as gurumurthy and giving them religious special and naked initiations is spoken of. Initiation is the destruction of the stool and the giving of wisdom. This diksha is an important ritual taken up by all religions and the path to muthi. The upanayana ritual of wearing the sacred thread is the qualification for the recitation of the Vedas and the observance of the vedic discipline in the vedic system. In the same way, it is sivadīdīksha which creates the qualification for the recitation of thirumarais and sivagamas in saiva dharma and to carry forward saiva discipline. While deekshavidhi explains some explanations, Arumuga Navalar mentions in saivavina's answer book about the special rule of initiation at the age of seven in Saivism. Even though the Guru preaches various mantras, the moola mantra is the thiruvainthazhutham "Shivayanam", your name has not been forgotten in my tongue appar swamigal |nathan namam namasivayave| Sambandar also praises Thiruvainthazhuthu. It is the Kriyapada of the original Sivagamas of this study that gives the details of Sivadīksha. It is made clear that all Saiva samajists, from sivachariyars, should be initiated and should follow the principles of initiation. Shiva deeksha is associated with life and the steps of this initiation are that a person who is initiated by Shiva wears shiva symbols and performs panchakshara prayer and receives the muthi of Shiva and removes ignorance and attains knowledge. Contemporary Practices of Sivadheeksha The necessity of Sivadeeksha in the present context has also been highlighted.

**Key Words:** Deekshai, Sivagama, Totra books, Pathathi, Kriyakramajothi, Deekshavidhi

**References**

1. Akila Ilangai Hindumamandram, Hindu Makkalukku Oru Kaiyedu, P. 75.
2. Swaminatha Sivachariar, C., *Kamikagamam*, pp. 6-9.
3. Arumuga Navalar, *Saiva Vinavidai*, P. 16.
4. Sivapadasundaram, S., *Saivakriyai Vilakkam*, P. 25.
5. Gopalakrishna Iyer, P., Kalanidhi, Hindu Panpattu Marabugal, Jaffna, *Vidya Veliyeedu*, pp.19-21.
6. Sivam, P., Abhiseka Teeksha Pathati, Koppai, pp.16-20.

# சைவ வாழ்வியலில் சிவாகமங்கள் கூறும் சிவதீட்சையின் வகிபங்கு

**திருமதி கவிதா கதிரமலை**
முதுதத்துவமாணி ஆய்வாளர்
உயர்பட்டப் படிப்பு பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

***ஆய்வுச்சுருக்கம்***

*சைவசித்தாந்த நூல்களாகவும், சித்தாந்த சைவசமயத்தின் பிரமாணங்களாகவும் உள்ள இருபத்தியெட்டு ஆகமங்களையும் பெருமான் தமது திருமேனியாகக் கொண்டருள்வதாக "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என மாணிக்கவாசகர் கூறியருளியது சிவாகமக் கருத்துக்களை முன்னிலைப்படுத்தியதாகும். சிவாகமங்களின் கிரியாபாதமே சிவதீட்சை பற்றி எடுத்தியம்புகின்றன. கிரியாபாதத்தில் ஆன்மக்கள் சக்திநிபாதம் பெறும் காலத்தில் அவற்றிற்குத் தாமே குருமூர்த்தியாய் எழுந்தருளி சமய விசேஷ, நிர்வாண தீட்ஷைகளைத் தந்தருளும் அற்புதம் பேசப்படுகிறது. தீட்ஷை என்பது மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பதாகும். சைவநெறியில் திருமுறைகளையும், சிவாகமங்களையும் ஓதுவதற்கும் சைவ ஒழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகுவதற்கும் உரிய தகுதியை உண்டுபண்ணுவது சிவதீட்ஷையாகும். தீட்ஷையானது சிவாச்சாரியார்கள் முதற்கொண்டு சைவசமயிகள் அனைவரும் தீட்ஷை பெறவேண்டும் என்பதையும் தீட்ஷை நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதும் தெளிவுபடுத்தப்படுகின்றது.*

***திறவுச்சொற்கள்:*** *சைவசமயம், சைவசித்தாந்தம், தீட்ஷை, சிவாகமம், தோத்திர நூல்கள், பத்ததி, கிரியாக்ரமஜோதி, தீட்ஷாவிதி*

**அறிமுகம்**

சைவம் என்பது சிவனை முழுமுதற் கடவுளாகப் போற்றப்படும் சமயமாகும். சைவம் சிவசம்பந்தமானது அப்பால் இயற்கையோடு இணைந்த தெய்வீக சக்தியையும் வளங்களையும் கொண்ட நித்தியமானது. சைவம் "மேன்மைகொள் சைவநெறி" என உயர்ந்த விளக்கத்தைத் தருகின்றது.

"இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை மெய்யன்போடு வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்று கூறியது ஈழத்து சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்ட நல்லைநகர் ஆறுமுக நாவலர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ, மண்ணில் நல்ல வண்ணம் வாழ சைவசமயம் வழிகாட்டுகின்றது. இவ்வாறு வழிகாட்டும் பண்புகளில் ஒன்றாக சைவ ஆசார அனுட்டானங்கள் விளங்குகின்றன. ஆசார முறைகள் சைவசமயத்தில் முதன்மை பெறுகின்றன. சைவசமயத்தில் சிவாகமங்களே தீட்சைகள் பற்றிய புனித ஆசாரங்களை எடுத்து ரைக்கின்றன. சிவாகமங்களில் கிரியாபாதமே சிவதீட்சை பற்றி எடுத்தியம்புகின்றது ஆகமங்களில் காமிக ஆகமம், அஜிதாகமம், வாதுளாகமம், மிருகேந்திர ஆகமம், காரணாகமம் போன்ற மூலாகமங்களும், பத்ததி நூல்களாக அகோரசிவாச்சாரியார், சோமசம்பு போன்றவர்களின் நூல்களும், சிவதீட்சை பற்றி விரித்துரைக்கின்றன.

சைவசமயத்தில் ஒருவர் பிறந்துவிட்டால் மாத்திரம் அவர் வைவராகிவிட முடியாது. தமது வாழ்வில் சைவ ஆசாரங்கள், சைவ ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பவரே உண்மைச்

சைவராவர். சிவநெறி நிற்கும் சைவர்களுக்கு உரிய சிவசின்னங்கள் விபுதி, உருத்திராக்கம், சிவபஞ்சாட்சரம் என்பனவாகும். சின்னங்கள் சிவபெருமானைக் குறித்து நிற்பன. சைவமக்களால் இவை அணியப் பெற்றதும், துதிக்கப்பெற்றும் வரவேண்டும். எனவே இச்சிவசின்னங்கள் அணிவதற்கும், துதிப்பதற்கும் முதலில் சைவராய்ப் பிறந்தோர் அனைவரும் சிவாகம முறைப்படி தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## தீட்சை

தீட்சை என்பது தீ சை என்று பிரிக்கும் போது தீ கொடுத்தல் எனவும் சை என்பது கெடுத்தல் எனவும் பொருள் தரும். அதாவது ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுத்தல் தீட்சுடர் போல் பிரகாசமான ஞான அறிவைப் புகட்டி மந்தமாய் மனதில் படிந்திருக்கும் மலங்களை நீக்கிவிடுதலே தீட்சை எனப்படும். சிவதீட்சை பெற்றவருக்கே திருவைந்தெழுத்து ஓதும் அதிகாரமும் சிவகைங்கரியம் செய்யும் அதிகாரமும் உண்டு. சைவசமயத்தில் தீட்சை பெறாதவர் இவற்றைச் செய்வதற்கும், செய்விப்பதற்கும் தகுதி அற்றவர். நமது உடம்பின் புற அழுக்கை நீரினால் சுத்தம் செய்வது போல உள்ளிருக்கும் சூக்கும உடம்பையும் அதில் உள்ள அழுக்குகளையும் ஆகமம், மந்திரஜெபம் முதலான அனுட்டானக் கிரியைகளினாலேயே புனிதமாக்க முடியும். இதனாலேயே சைவ சமயத்தில் ஏழு வயதில் தீட்சை பெறவேண்டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தீட்சை மூன்று வகைப்படும்.

1. சமய தீட்சை
2. விசேட தீட்சை
3. நிர்வாண தீட்சை

## சமய தீட்சை

சமய தீட்சை, சாதார திட்சை, நிராதார தீட்சை என இரு வகைப்படும்.

## சாதார தீட்சை

மும்மலங்களை உடைய சகலருக்கு இறைவன் மானிட வடிவில் உள்ள குருவை ஆதாரமாகக் கொண்டு மலத்தைக் கெடுப்பது சாதாரண தீட்சை எனப்படும்.

## நிராதார தீட்சை

பக்குவ ஆன்மாக்களுக்கு இறைவன் தானே நேரில் எழுந்தருளி மலத்தைக் கெடுக்கும் முறை நிராதார தீட்சை எனப்படும்.

## விசேட தீட்சை

சிவ பூசை முதலியவற்றைச் செய்வதற்கும் சிவாகமங்களை ஓதுவதற்கும் யோக சாதகைளை மேற்கொள்வதற்கும் அதிகாரம் அளிப்பது விசேட தீட்சை எனப்படும். இது கிரியை மார்க்கத்தாருக்கும் யோக மார்க்கத்தாருக்கும் அளிக்கப்படுவது

## நிர்வாண தீட்சை

ஞானமார்க்கத்தாருக்கு அளிக்கப்படுவது நிர்வாண தீட்சை சமய தீட்சையானது கிரியா வகையில் கிரியாகுரு அளிக்கும் போது ஏழு வகையில் ஏதாவது ஒரு வகையில் சீடனின் பக்குவ நிலைக்கேற்ப வழங்கப்படும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவையாவன

1. நயன தீட்சை
2. பரிச தீட்சை
3. வாசக தீட்சை
4. மானச தீட்சை
5. யோக தீட்சை
6. சாத்திர தீட்சை
7. ஔத்திரி தீட்சை எனப்படும்.

ஔத்திரி தீட்சை அக்கினி - ஹோமம் சம்பந்தமானது. குண்டம், மண்டலம் அமைத்து அக்கினி வளர்த்து செய்யப்படுகின்றது. இது கிரியாவதி, ஞானாவதி என இரு வகைப்படும்.

அருட்பார்வையினாலும் தொடுவதாலும், உபதேசத்தினாலும், ஹோமத்தினாலும் ஒரு மாணாக்கனைப் பரிசுத்தானாகக் குருவால்

ஆக்குவதே தீட்சைகளாகும். சைவ சமயத்திற் பிரவேசிப்பதற்கும் அதன் வெவ்வேறு படிகளிற் புகுவதற்கும் அருகதை அளிப்பது தீட்சையே. நாயன்மார்கள் முதலான இறையடியார்களுக்கும் இறைவன் அவரவர் பக்குவ நிலைக்கேற்ப தீட்சை வழங்கியுள்ளார். அந்த வகையில் சிவபெருமான் தனது பார்வையாலே திருஞானசம்பந்தருக்கு திருத்தோணிபுரத்தில் நயனதீட்சை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. சிவஞானம், கலைஞானத்தோடு சம்பந்தர் தோடுடைய செவியன் என்ற பதிகம் பாடினார். எனவே தீட்சை வழங்கிய பின்புதான் நாயன்மார்கள் இறைவனின் திருநாமங்கள், மகிமை, புகழ், அற்புதங்களைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இவ்வாறு திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற சமயகுரவர்களுக்கு திருவடி தீட்சை வழங்கப்பட்டது. அருணகிரிநாதருக்கு நயனதீட்சையும், திருவடி தீட்சையும் முருகப்பெருமர் அளித்துள்ளார். சிவாச்சாரிய அபிஷேகதீக பத்ததி நூலில் தீட்சைக்கு உகந்த மாதங்கள் வருடங்கள், திதிகள் நட்சத்திரங்கள், இலக்கணங்கள் என்பன பற்றி சிறப்பாகக் கூறப்படுகின்றன. தீட்சை பெறுவதற்குகந்த உத்தமமான மாதமாக வைகாசி சிறப்புக்குரியது. ஆசாரிய அபிடேகம் செய்வதற்கும் பொருத்தமாகும்.

சிவாச்சாரியாருக்கு இருக்க வேண்டிய தகமைகளையும், தீட்சைக்கான கிரியை முறைகளையும் சிவாகமங்கள் கூறுகின்றன. அகோரசிவாச்சாரியார் விரிவான முறையில் அதற்கான பத்ததி ஒன்றை உருவாக்கி வழங்கியுள்ளார். அதனையே நமது முன்னோர்கள் நீண்டகாலம் பயன்படுத்தி வந்துள்ளனர் நீண்ட காலத்துக்கு முன் அச்சு வாகனமேறிய அப்பத்ததியின் பிரதிகள் இன்று கிடைத்தற்கரிதாகிவிட்டன.

சிவாச்சாரியருக்கு இருக்க வேண்டிய தகமைகளைச் சிவாகமங்கள் கூறுகின்றன.

1. திருமணம் முடித்து இல்லறம் நடத்து பவராக இருக்க வேண்டும்
2. உடல் உளக் குற்றமற்றவராக இருத்தல் வேண்டும்
3. கல்வி அறிவும் ஒழுக்க மேம்பாடும் மிக்கவராக இருத்தல் வேண்டும்
4. சைவ நாற்பாதங்களில் பயிற்சி உடையோராக இருத்தல் வேண்டும்
5. சீடர்களுக்குச் சிறந்த ஒழுக்கத்தையும் சைவ பாரம்பரியத்தையும் போதிப்பவராக இருத்தல் வேண்டும்
6. பதினாறு முதல் எழுபது வயதிற்கு உட்பட்டோராக இருத்தல் வேண்டும்

ஆறுமுகநாவலரின் சைவவினாவிடை நூலில் தீட்சை பெற்றவர்கள் வணங்குவதற்குரியோர் பற்றியும் சிறப்பித்து கூறப்படுகின்றது.

1. குரு என்றால் தீட்ஷாகுரு, வித்யாகுரு, போதககுரு முதலானோர் ஆவர். சங்கமம் என்பது நிர்வாண தீட்ஷிதர், விசேசு தீட்ஷிதர், சமய தீட்ஷிதர் எனும் முத்திறத்துச்சிவபக்தர்களை அழைப்பர்.
2. சமய தீட்ஷிதர் வணங்குவதற்கு உரியவர்கள் ஆசாரியர், நிர்வாண தீட்ஷிதர் விசேசு தீட்ஷிதர், சமய தீட்ஷிதர் தம்மில் மூத்தோரையும் வணங்குவர்.
3. விசேசு தீட்ஷிதர் வணங்குவதற்கு உரியவர்கள் ஆசாரியாரையும் நிருவாண தீட்ஷிதரையும், விசேசு தீட்ஷிதர்களுள்ளே தம்மில் மூத்தோரையும் வணங்குவதற்கு உரியர்.
4. நிர்வாண தீட்ஷிதர் வணங்குவதற்கு உரியவர் ஆசாரியாரையும் நிர்வாண தீட்ஷிதருள்ளே தம்மில் மூத்தோரையும் வணங்குவதற்கு உரியர்.
5. ஆசாரியர் வணங்குவதற்கு உரியவர்கள் ஆசாரியர்களுள்ளே தம்மில் மூத்தோரையும் வணங்குவதற்கு உரியர்.

**தீட்சைக்குகந்த மாதங்கள்**

உத்தமம் - வைகாசி

மத்திமம் - பங்குனி, மார்கழி, ஆனி

அதமம் - ஆடி, ஆவணி, மாசி

விலக்க வேண்டியவை - சித்திரை, தை, புரட்டாசி

**தீட்சைக்குகந்த வாரங்கள்**

ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி

**தீட்சைக்குகந்த திதிகள்**

துவிதீயை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, பௌர்ணமி

**தீட்சைக்குகந்த நட்சத்திரங்கள்**

அஸ்வினி, ரோகினி, மிருகசீரிடம், புணர்புசம், புசம், மகம், உத்தரம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், மூலம், புராடம், உத்தராடம், சதயம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி

**தீட்சைக்குகந்த இலக்கினங்கள்**

இடபம், சிம்மம், கன்னி, தனு, மீனம்.

**சிவதீட்சை வழங்கும் நிறுவனங்கள்**

சமூக வாழ்வியலில் பாடசாலைகள், ஆதீனங்கள், ஆலயங்கள் போன்ற பொது இடங்களில் தீட்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சைவப்புலவர் பரீட்சை எழுதுவதற்கு முதலில் தீட்சை பெற்ற பின்பு தான் பரீட்சை எழுத முடியும். திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த, சைவத்திருமுறைபட பயிற்சி மைய கொழும்பு, இணுவில் கிளைகளில் பயிலுநர்களாகச் சேர்பவர்களும் சிவதீட்சை பெற்றிருக்க வேண்டும் என்ற விதியும் நடைமுறையில் உள்ளது. தீட்சை பெறாதவர்கள் கூட மஹாற்சவ காலத்தில் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டால் அவைருக்கும் சாம்பவ தீட்சை கிடைக்கிறது.

தீட்சை பெறுவதனால் ஒரு சைவசமயி புதமாகின்றர். புர்வ, அபர கிரியைகள், சைவகைகங்கரியங்கள் செய்வதற்குத் தகுதியைப் பெறுகின்றான். சிவப் பிராமண குலத்திலுதித்த ஒருவரே பரார்த்தக் கிரியைகளை நடத்தி வைக்கும் தகுதியுடையவர் எனச் சிவாகமங்கள் புகழுகின்றன. அவர்களும் முறைப்படி சமய, விஷேட, நிர்வாண தீட்சைகளையும் பெற்று ஆசாரியாபிஷேகத்தையும் செய்தவர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. ஆன்மார்த்தமாகச் சிவபுசைகளைச் செய்ய விரும்பும் அடியார்களும் தீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**குறிப்புகள்**

1. அகில இலங்கை இந்துமாமன்றம், இந்து மக்களுக்கு ஒரு கையேடு, ப-75.
2. சுவாமிநாத சிவாச்சாரியார்.செ, காமிகாகமம்- பக்.6 - 9.
3. ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை, ப.16
4. சிவபாதசுந்தரம்.சு, சைவக்கிரியை விளக்கம் - ப-25
5. மேலதுநூல்,ப-26.
6. மேலது நூல், பக் - 27-30
7. அகில இலங்கை இந்துமாமன்றம், இந்து மக்களுக்கு ஒரு கையேடு - ப-75.
8. மேலது நூல், ப - 76
9. தீட்ஷாவிதி - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். க, சைவ வினாவிடை - பக்-6-20
10. கோபாலகிருஷ்ணஐயர். ப, கலாநிதி, இந்துப்பண்பாட்டு மரபுகள் - வித்யா வெளியீடு, யாழ்ப்பாணம் - பக்.19-21.
11. மேலது நூல் - ப.23
12. மேலது நூல் - ப.24
13. மேலது நூல் - ப.28
14. சிவம்.ப, அபிஷேக தீட்ஷா பத்ததி, கோப்பாய், பக்-16-20.